people for Education
BECAUSE EDUCATION MATTERS MOST

# கல்வியின் விடயத்தில் யார் எதனைச் செய்கிறார்கள்

கனடாவில் அரச கல்வி என்பது மாகாண அரசாங்கத்தின் பொறுப்பில் உள்ள ஒன்றாகும். ஒன்ராறியோவில் உள்ள அரச கல்வித்திட்டத்தின் கட்டமைப்பினையும் அத்திட்டத்தில் பாடசாலைகள், பாடசாலைச் சபைகள் மற்றும் கல்வி அமைச்சு ஆகியன வகிக்கும் பங்கினையும் புரிந்து கொள்வதற்கு இக்குறுந்தகவல் பிரசுரம் உங்களுக்கு உதவியாக அமையும்.

## மாகாணக் கல்வி அமைச்சு

ஒன்ராறியோவில் அரச கல்வித் திட்டத்தின் எல்லா அம்சங்களையும் மேற்பார்வை செய்யும் பணிக்கு மாகாணக் கல்வி அமைச்சு பொறுப்பு வகிக்கிறது. கல்விக்கான அமைச்சர், பாடசாலைச் சபைகள், மேற்பார்வை உத்தியோகத்தர்கள் (அத்தியட்சகர்கள்), பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர் மற்றும் மாணவர் ஆகியோரின் கடமைகளையும் பொறுப்புகளையும் ஒன்ராறியோ மாகாணக் *கல்விச் சட்டவாக்கம்* (*Education Act*) வரையறுத்துக் கூறுகிறது.

கல்வி அமைச்சு பொறுப்பு வகிக்கும் விடயங்கள் இவை:

- பாடசாலைச்சபைகளுக்குரிய கொள்கைக் கோட்பாடுகளையும் வழிகாட்டல் நெறிகளையும் வரையறுத்தல்
- நிதிவழங்கலுக்கென உள்ள முன்னேற்பாட்டுக் கணிப்பு முறையை (Funding Formula) உபயோகித்து பாடசாலைச் சபைகளுக்கு நிதித் தொகையை ஒதுக்குதல்.
- மாகாணத்துக்கான பாடவிதானம் (ஒவ்வொரு வகுப்பிலும் மாணவர்கள் கற்கும் விடயங்கள் பற்றியது ) ஒன்றினை நிறுவுதல்
- பட்டம் வழங்குதலுக்கு (டிப்புளோமாக்கள், சான்றிதழ்கள்) உரிய தேவைப்பாடுகளை நிறுவுதல்
- அங்கீகாரம் பெற்ற பாடப்புத்தகங்கள் மற்றும் கற்கைக்கான தகவல் மூலவளங்கள் ஆகியவற்றுக்கு உரிய பட்டியல்களை உருவாக்குதல்

கல்வி அமைச்சர் மாகாண முதல்வரினால் நியமிக்கப்படுகிறார். அவர் மாகாணப் பாராளுமன்றத்தில் தெரிவு செய்யப்பட்ட ஒரு அங்கத்தவராகவும் (MPP) இருக்கிறார்.

கல்வி அமைச்சுடன் நீங்கள் **www.edu.gov.on.ca** என்ற இணையத்தளம் வழியாக அல்லது 1-800-387-5514 என்ற தொலைபேசி எண்ணை அழைப்பதன் மூலமாகத் தொடர்பு கொள்ளமுடியும்.

## கல்வித் தரம் மற்றும் பொறுப்புடைமைக் காரியாலயம் (EQAO / ஈக்குவாவோ)

EQUAO / ஈக்குவாவோ என்பது முழு மாகாணம் அடங்கிலும் வகுப்புத் தரங்கள் 3, 6, 9 மற்றும் 10 ஆகியவற்றில் நியமமுறைப்படுத்திய சோதனையை நடத்தும் முயற்சியை மேற்பார்வை செய்கின்ற ஒரு சுயாதீன அரசாங்க அமைப்பு ஆகும். அதன் பொறுப்பில் உள்ள கடமைகள் பின்வருமாறு:

- வாசிப்பு, எழுதுதல் மற்றும் கணிதம் ஆகியவற்றில் சோதனைகளை உருவமைத்து அவற்றை நடாத்துதல்
- நியமமுறைப்படுத்திய சோதனையின் முடிவுகளை சம்பந்தப்பட்ட அமைச்சுக்கும் பொதுமக்களுக்கும் அறிவித்தல்
- சோதனை முடிவுகளை எதிர்காலத்தில் முன்னேற்றுவதற்கான விதப்புரைகளை வழங்குதல்

இந்த EQUAO / ஈக்குவாவோ அமைப்புடன் நீங்கள் **www.eqao.com** என்ற இணையத்தளம் வழியாக அல்லது 1-888-327-7377 என்ற எண்ணை அழைப்பதன் மூலமாகத் தொடர்பு கொள்ள முடியும்.

## ஆசிரியர்களுக்கான ஒன்ராறியோ கல்லூரி

கல்வி கற்பிக்கும் ஆசிரியத் தொழில்துறையினை ஆசிரியர்களுக்கான ஒன்ராறியோ கல்லூரி (Ontario College of Teachers) சட்டரீதியாகக் கட்டுப்படுத்துகிறது. அதன் பொறுப்பில் உள்ள கடமைகள் பின்வருமாறு:

- கல்வி கற்பிப்பதற்கான சான்றிதழ் ஒன்றினைப் பெறுதற்கான தேவைப்பாடுகளை நிறுவுதல் மற்றும் ஆசிரியர் பயிற்சித் திட்டங்களுக்கு உரிய நியமங்களை விதித்தல்
- தகுதி பெற்ற ஆசிரியர்களின் மாகாணப் பதிவேடு ஒன்றினை வைத்துப் பேணுதல்
- ஆசிரியர்களுக்கு எதிராக எழுப்பப்படும் முறைப்பாடுகளை விசாரித்தல்

ஆசிரியர்களுக்கான ஒன்ராறியோ கல்லூரியுடன் நீங்கள் **www.oct.ca** என்ற இணையத்தளம் வழியாக அல்லது 1-888-534-2222 என்ற தொலைபேசி எண்ணை அழைப்பதன் மூலமாகத் தொடர்பு கொள்ள முடியும்.

## பாடசாலைச் சபைகள்

ஒன்ராறியோவில் 72 பாடசாலைச் சபைகள் (school boards) இயங்கி வருகின்றன. இவற்றில் ஆங்கில மொழி வழியான 31 அரச பாடசாலைச்சபைகள், ஆங்கில மொழி வழியான 29 கத்தோலிக்க பாடசாலைச் சபைகள், பிரெஞ்சு மொழி வழியான 4 அரச பாடசாலைச் சபைகள், பிரெஞ்சு மொழி வழியான 8 கத்தோலிக்க பாடசாலைச் சபைகள் என்பவை அடங்கும். இவற்றைத்தவிர வைத்தியசாலைகள், சிகிச்சை நிலையங்கள் மற்றும் மாகாணத்தின் தொலைதூரப் பகுதிகள் போன்றவற்றில் உள்ள பாடசாலைகளை மேற்பார்வை செய்வதற்கெனப் ‘பாடசாலை நிர்வாக அமைப்புகள்’ பலவும் இருந்து வருகினிறன.

பாடசாலைச் சபைகளின் பொறுப்பில் உள்ள கடமைகள் பின்வருமாறு:

- மாகாண அரசிடம் இருந்து தாம் பெறுகின்ற நிதிகளைக் கொண்டு ஆசிரியர்களையும் மற்றைய பணியாளர்களையும் சம்பளத்துக்கு அமர்த்துதல், பாடசாலைகளை கட்டியெழுப்பி அவற்றைப் பேணுதல், பாடசாலைகளுக்குத் தேவையான உபயோகப் பொருட்களை வாங்குதல் போன்ற விடயங்களில் எவ்வாறு செலவிடுவது எனத் தீர்மானம் செய்தல்
- புதிய பாடசாலைகளை எங்கே கட்டியெழுப்ப வேண்டும் எனவும், வேறு பாடசாலைகளை மூடவேண்டுமா எனவும் எப்பொழுது அதனைச் செய்யவேண்டும் எனவும் தீர்மானம் எடுத்தல்
- விசேட முறைக் கல்வி, புதிய குடிவரவாளர்களுக்கான பயிற்சித் திட்டங்கள் மற்றும் பிரெஞ்சு மொழி ஆழ்முறைக் கல்வி போன்ற செயற்திட்டங்களைப் பாடசாலைகளில் வழங்குதல்
- அவ்வப் பகுதிக்கான உள்ளூர் கல்விக் கொள்கையினை (உ-ம்: பாடசாலைப் பாதுகாப்பு, வீட்டுவேலை) உருவாக்குதல்
- பாடசாலைச் சபைக்கென வருடாந்தம் சமன்படுத்திய வரவுசெலவுத் திட்டம் ஒன்றினை நிறுவுதல்
- *கல்விச் சட்டவாக்கத்தில்* விதிக்கப்பட்டு உள்ள விதிமுறைகளைப் பாடசாலைகள் பின்பற்றுவதை உறுதிப்படுத்துதல்
- ஒவ்வொரு பாடசாலையிலும் ஒரு பாடசாலை நிருவாக ஆலோசனைச் சபையினையும் (School Council) பாடசாலைச் சபைக்கென ஒரு பெற்றோர் ஈடுபாட்டுக் குழுவினையும் (Parent Involvement Committee) நிறுவுதல்

People for Education is an independent parents' group working to support public education in Ontario's English, French and Catholic schools.
You can reach us at: P.O. Box 64, Station P, Toronto, Ontario, M5S 2S6
phone: 416-534-0100 fax: 416-536-0100 e-mail: info@peopleforeducation.com or visit: www.peopleforeducation.com

**நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் (Trustees)** பாடசாலைச் சபையில் சேவை செய்யவென மாநகரசபைத் தேர்தலின் பொழுது தெரிவு செய்யப்படுகின்றனர். அவர்கள் தத்தம் பகுதியில் உள்ள பெற்றோர் மற்றும் மாணவர்களின் நலன்களைப் பிரதிநிதிப்படுத்தும் சேவையாளர்களாக இருக்கின்றனர். நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் மாணவர்களைப் பாடசாலையில் இருந்து வெளியேற்றுதல் சம்பந்தமான குழுக்களில் இடம் வகிப்பதுடன், பாடசாலைச் சபையின் வரவுசெலவுத் திட்டம் பற்றிய முடிவுகளையும் எடுக்கின்றனர். உங்களுக்கான நம்பிக்கைப் பொறுப்பாளராகக் கல்விச் சபையில் யார் இருக்கிறார் எனப் பாடசாலைக் காரியாலயத்தில் விசாரிப்பதன் மூலமாக, அல்லது உங்கள் பாடசாலைச் சபையின் இணையத்தளம் வழியாக நீங்கள் அறிந்து கொள்ள முடியும்.

**பாடசாலை அத்தியட்சகர்கள் (School Superintendents)** அல்லது "மேற்பார்வை அதிகாரிகள்" எனப்படுவோர் ஒவ்வொரு பாடசாலைச் சபையிலும், குழுக்களாக இயங்கும் பாடசாலைகளின் தனித்தனி குழுக்களுக்கு பொறுப்பாக இருக்கும் சபை ஊழியர்கள் ஆவர். பாடசாலையில் இருந்து இடைநிறுத்தப்படுவது தொடர்பிலான மேன்முறையீடுகள், விசேட கல்வி தொடர்பிலான கூட்டங்கள், வீட்டுப் பிரதேச பாடசாலையை தவிர்த்து வேறு ஒரு பாடசாலைக்கு போவதற்காக செய்யப்படும் விண்ணப்பங்கள் போன்ற விடயங்களில் பாடசாலை அத்தியட்சகர்கள் பங்குபற்றுகின்றனர். பாடசாலைச் சபை முழுவதுக்கும் பொருந்தும் திட்டங்களை மேற்பார்வை செய்வதற்கும் அத்தியட்சகர்களை (உதாரணம்: விசேட கல்விக்கான அத்தியட்சகர்) பாடசாலைச்சபை நியமிக்கக் கூடும். பாடசாலை அதிபரிடம் இருந்து உங்களுக்குத் தேவைப்படும் உதவியை நீங்கள் பெறமுடியாது இருக்கையில், நீங்கள் உங்களுடைய பாடசாலை அத்தியட்சகருடன் தொடர்பு கொள்ள முடியும்.

இம்மாகாணத்தில் உள்ளபாடசாலைச் சபைகளின் பூரண பட்டியல் ஒன்றினை நீங்கள் காணக் கூடிய இணையத் தளம்:
**http://esip.edu.gov.on.ca/english/core/BoardDirectory.asp**

## பாடசாலைகள்

**அதிபர்கள் (Principals)** தனிப்பட்ட பாடசாலைகளை நிருவகிப்பதற்குப் பொறுப்பாக இருக்கிறார்கள். இவர்களுக்கு உதவியாக இருப்பதற்கு **உப-அதிபர்களில்** ஒருவரோ அல்லது அதனிலும் கூடுதலானவர்களோ நியமிக்கப்படுவதும் உண்டு. அதிபர்கள் பின்வரும் கடமைகளுக்குப் பொறுப்பாக இருக்கிறார்கள்:

- பாடசாலையில் இடம்பெறும் கற்பித்தல் மற்றும் பாடநெறி ஆகியவற்றை மேற்பார்வை செய்வதுடன், பாடசாலை அபிவிருத்தித் திட்டம் சம்பந்தப்பட்ட தீர்மானங்களை எடுத்தல்
- ஆசிரியர்களையம் மற்றைய பணியாளர்களையும் மேற்பார்வை செய்தல்
- மாணவர்களைப் பாடசாலையில் அனுமதிப்பதுடன் விசேட கல்விக்கான அனுமதி பற்றியும் தீர்மானங்கள் எடுத்தல்
- பாடசாலைக்கான வரவுசெலவுத் திட்டத்தினை நிருவகிப்பதுடன் பாடசாலைக் கட்டிடம் பேணப்படுவதை உறுதிசெய்தல்
- கல்வித்துறைத் தலைவர்கள், கலைத்துறை நிபுணர்கள் அல்லது நூலகப் பணியாளர்கள் போன்ற விசேடித்த பணியாளர்களை நியமிப்பது பற்றிய தீர்மானங்களை எடுத்தல்
- மாணவர்களுக்கான பதிவேடுகளை வைத்துப் பேணுவதுடன் மாணவர்களின் தேர்ச்சி அறிக்கை அட்டைகளைப் பெற்றோருக்கு அனுப்பி வைப்பதை உறுதிப்படுத்தல்
- மாணவர்களின் நன்னடத்தையை மேற்பார்வை செய்வதுடன், மாணவர்களை இடைநிறுத்துவது மற்றும் நிகழக்கூடிய வெளியேற்றம் போன்றவை பற்றித் தீர்மானங்கள் எடுத்தல்
- பாடசாலை நிர்வாக ஆலோசனைச் சபையுடன் சேர்ந்து தொழிற்பட்டு, கல்வியில் பெற்றோரின் ஈடுபாட்டினை ஊக்குவித்தல், நிதிசேர்த்தல் தொடர்பில் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு உதவுதல், மற்றும் மாணவர்களின் வீட்டுவேலை, பாடசாலையில் அவர்களின் நடத்தைக்கான விதிமுறை (Code of Conduct) போன்ற விடயங்கள் பற்றிப் புதிய கொள்கைகளை விருத்திசெய்தல்

**ஆசிரியர்கள் (Teachers)** ஒன்ராறியோவில் உள்ள அரச கல்வித் திட்டத்தில் அடங்கும் மாணவர்களுக்குக் கல்வி கற்பிப்பதற்கு, கற்பித்தலுக்குரிய அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் ஒன்று வைத்து இருப்பது அவசியம் ஆகும். ஆசிரியர்கள் பொறுப்பாக இருக்கும் கடமைகள் பின்வருமாறு:

- வகுப்புப் பாடத்துக்கான திட்டம் வரைதல், வகுப்புகளில் கல்வி கற்பித்தல் மற்றும் மாணவர்களின் முன்னேற்றத்தினை மதிப்பீடு செய்தல்
- வகுப்பில் மாணவர்களின் நன்னடத்தையைப் பேணுதல்
- பாடத்துக்குப் புறம்பான விளையாட்டுகள், சங்கங்கள் மற்றும் செயல்முறைகளை முன்நின்று நடாத்துதல் (தொண்டுப் பணியாகச் செய்தல்)
- மாணவர்களின் கல்வி முன்னேற்றம் பற்றி பெற்றோருடன் தொடர்பாடுதல்

**பாடசாலை நிருவாக ஆலோசனைச் சபைகள் (School Councils)** பாடசாலை அதிபருக்கும் பாடசாலைச் சபைக்கும் ஆலோசனை வழங்குகின்றன. ஒவ்வொரு பாடசாலையிலும் பாடசாலை நிருவாக ஆலோசனைச் சபை ஒன்று இருத்தல் அவசியம் ஆகும். இதில் அங்கத்தவர்களாக இருப்போரில் மாணவர்களின் பெற்றோர், பாடசாலை அதிபர், ஆசிரியர் ஒருவர், (உயர் பாடசாலைகளில்) மாணவர் ஒருவர், கல்வி கற்பிக்காத பணியாளர் ஒருவர், சமூகப் பிரதிநிதி ஒருவர் அடங்குவர். இதில் அங்கத்தவர்களாக இருப்போரில் பெரும்பாலானவர்கள் பெற்றோராக இருப்பதுடன், இச்சபையின் தலைவராகவும் ஒரு பெற்றார் இருத்தல் வேண்டும். பாடசாலை நிருவாக ஆலோசனைச் சபைத் தீர்மானங்களின் பொழுது பாடசாலை அதிபர்கள் வாக்களிப்பது இல்லை. பாடசாலை நிருவாக ஆலோசனைச் சபை பொறுப்பாக இருக்கும் கடமைகள் பின்வருமாறு:

- பெற்றோருடனும் சமூகத்துடனும் பாடசாலை சம்பந்தப்பட்ட தகவல்களைப் பங்கிட்டுக் கொள்வதுடன், ஆலோசனைச் சபை விவாதிக்கும் விடயங்கள் பற்றி அவர்களின் கருத்தினை நாடுதல்
- பாடசாலையின் வருட நிகழ்ச்சித் தொடர்கள், பாடசாலையின் சாதனையை முன்னேற்றுவதற்கான யுக்தித் திட்டங்கள், மாணவர் நடத்தைக்கான விதிமுறை மற்றும் ஆடையணி, அதிபர்கள் தெரிவுக்கான அடிப்படைத் தத்துவங்கள், மற்றும் பாடசாலையைப் பாதிக்க உள்ள பாடசாலைச் சபைக் கொள்கைகள் போன்ற விடயங்கள் பற்றி பாடசாலை அதிபருக்கும் பாடசாலைச் சபைக்கும் ஆலோசனை வழங்கல்

பாடசாலைச் சமூகத்தினருக்கும் நிதிசேர்ப்பதற்குமாய் சமூக நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்யும் பணியிலும் பல பாடசாலை நிருவாக ஆலோசனைச் சபைகள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றன.

பாடசாலை நிருவாக ஆலோசனைச் சபைகள் பற்றி மேலதிக தகவல் பெற நீங்கள் செல்லவேண்டிய இணையத்தளம்:
**http://www.edu.gov.on.ca/eng/general/elemsec/council/guide.html**

## மேலதிக தகவல் பெறுவதற்கு

ஒன்ராறியோவின் கல்வித் திட்டம் பற்றி இன்னும் கூடுதலாக தெரிந்து கொள்வதற்கும், அதில் நீங்கள் எவ்வாறு ஈடுபட முடியும் என அறிவதற்கும் பின்வரும் அமைப்புகளுடன் தொடர்பு கொள்ளலாம்:

கல்விக்கான மக்கள்
People for Education
**www.peopleforeducation.com**

கத்தோலிக்க கல்வியில் ஒன்ராறியோ பெற்றோரின் சங்கம்
The Ontario Association of Parents in Catholic Education
**www.oapce.on.ca**

வீடு மற்றும் பாடசாலை சங்கங்களின் ஒன்ராறியோ சம்மேளனம்
The Ontario Federation of Home and School Associations
**www.ofhsa.on.ca/**

THE ONTARIO TRILLIUM FOUNDATION
LA FONDATION TRILLIUM DE L'ONTARIO

This tip sheet was developed with the support of the Ontario Trillium Foundation.

Copies are available in several languages at www.peopleforeducation.com.
For more information, call 416-534-0100 (toll-free 1-888-534-3944) or email info@peopleforeducation.com
© People for Education 2008